நான்காவது தமிழ்ச் சித்தர்
தத்துவக் கருத்தரங்கு, மதுரை.

## இராமலிங்க சித்தரின் சித்தி நிலைப் படமும்
## ரிஷிகள் - யோகிகள் - சித்தர்கள் தம் காந்தக் கற்களும்

* * *

T.R. துளசிராம்
ஸ்ரீ அரவிந்தர் ஆசிரமம், புதுச்சேரி.

இராமலிங்க வள்ளல் பெருமான் தம் இறுதிக்காலங்களில் விபூதி போன்ற சமயச் சின்னம் எதும் அணியாமல் மேட்டுக்குப்பத்தில் வாழ்ந்தபோது அருட்ஜோதி அவரது உடலிலும் நிரம்பி சுற்றுப்புறச் சூழலிலும் ஊடுருவிப் பரவி இறைமயமான இறவா உடலுடன் மரணமிலாப் பெருவாழ்வடைந்து உலக மக்களின் உடல்களிலெல்லாம் புகுவதற்கான சித்தி நிலையில் விளங்கியவாறு அமர்ந்திருக்கும் நிலையை - நினைந்து வரைந்த ஓவியத்தின் போட்டோப் பிரதிப் படமாகும்.

பெருமானின் கண்கள் கருணையுடன் மேலான அருட்சக்தியைப் பொழிந்த வண்ணமா-யுள்ளன. நம் இருகைவிரல் நுனிகளால் அவரது உடலையும், பின்பு அவரது சுற்றுப்புறச் சூழலையும் தனித்தனியாக 3 நிமிடம் தொட்டுணர்ந்தால், அத்திருமேனி அருட்பெருஞ்ஜோதி சக்தியையும் (அதாவது சித்தி வளாகத்திலுள்ள அல்லது அப்படத்திலுள்ள அதே உயரிய சக்தியை) உணர்த்தி, அவரது புறச்சூழல் இன்னும் மேலான சச்சிதானந்த சக்தியையும் வெளிப்படையாகவே உணர்த்தும். குறிப்பாக அவரது உள்ளங்கை, பாதம், இதயநடு இவையும் சச்சிதானந்த சக்தியைப் புலப்படுத்தும். கண்களைப் பார்த்தால் இவ்விரு நிலைச் சக்திகளையும் இணைத்த பேராண்டவரின் அருட்பெருஞ்சக்தியாக உணரலாம்.

ஆகவே, அவரது உடல், அதன் சூழல், அவரது கண்கள் படிப்படியாக நம் தியான உணர்வை ஆற்றலைப் பெருக்கி உள்முகமாக மேலும் மேலும் வலிமையுடன் ஆழ்த்தச் செலுத்தும். ஆனால், விபூதி அணிந்துகொண்ட வள்ளலாரின் படமோ, ஞானசபை, சாலை பின்னணியாகக் கொண்ட படமோ இவ்வளவு சிறப்பாக பூரண சக்தியுடன் அமையவில்லை. மற்ற மகான்களின் படமும் இத்துணைச் சிறப்போடு உடலளவிலும் விளங்கும் பூரணசக்தியுடன் அமையவில்லை. பெருமானின் பூரண உருவத்தை மார்பளவு சுருக்கிப் படமாக ஆக்கினால் அதன் சக்தி குறைந்து விடும். விபூதி பூசிய அவர் படத்திலும் சக்தி குறைந்துவிடுகிறது.

இப்படத்தின்மீது ஒரு சாத்துக்குடி ஆரஞ்சுப் பழத்தை வைத்து இரு கைகளாலும் தொட்டு எடுத்தால் அதன் தோல் (வெளிப்பாகம்) பெருமானது உடல் சக்தியையும், உட்சுளைப்பழம் மேலான சச்சிதானந்த சக்தியையும், விதைகள் சமநிலைப்படுத்தும் பரம்பொருளின் சக்தியையும் (State of Equality or Equalising Power ) உணர்த்தும். விதைகளைத் தொட்டபின், தோலையோ சுளையையோ தொட்டால் அவை வித்தியாசமின்றி ஒரே சமமான சக்தியையே உணர்த்தும். செடி முளைப்பதற்கு இப் படத்தின் மீது வைத்து எடுத்த நீர் பாத்திரத்தின் தண்ணீரை ஊற்ற வேண்டும்.

இம்மூன்று உயர்சக்திகளை வெளிப்படுத்தும் ஆற்றல் வேறு யாருக்கும் அமையவில்லை. இம்மூன்றும் பெருமானிலும் அவரது படத்திலும் இருப்பதாய் அறியவேண்டும்.

ஆகவே, அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரை நினைந்து இப்படத்தைச் சிறிது நேரம் தொட்டும் பார்த்தும், அல்லது தொட்டபடியே பெருமானின் கண்களைப் பார்த்தும் வந்தால், மனஅமைதியும் இதய நெகிழ்வும் ஏற்படும். ஆகவே வழிபாடு, ஜபம், தியானம் செய்வதற்கும் அருளைப் பெறுவதற்கும் இது ஒரு இன்றியமையாத சாதனமாகும். மாதா மாதம் வரும் பூச நாளன்று ஜோதி ஆண்டவர் நம்மைத் தேடிவந்து சிறப்பாக அருளுகிறார். அன்று தியானம் கவனாசீர்.